**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**CC.No. 144/2018**

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திருமதி.ஐஸ்வர்யா என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.ஐஸ்வர்யா | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | மதிச்சந்திரன் | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | PW01 |
| வட்டம் | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |

**( எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேவாமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. 10.12.2017ம்தேதி சுமார் 07.00 மணியளவில், நானும் எனது அண்ணன் ராஜேஷ்குமாரும் எனக்கு உடல்நிலை சரியில்லை என்று ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தோம். உத்திரக்குடி பஸ் ஸ்டாப் அருகில் சென்றபோது, ஒரு இருசக்கர வாகனம் எனது காலில் மோதியது. அதில் எனக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. வலது கையிலும் அடிபட்டது. வலது பக்க முகத்திலும் காயம் ஏற்பட்டது. வாகனம் ஓட்டி வந்த எனது அண்ணன் ராஜேஷ் குமாருக்கும் வலது இடுப்பிலும், கையிலும், தோள்பட்டை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. நாங்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டோம். எங்களுக்கு எதிரே இருசக்கர வாகனத்தில் மோதிய, வாகனத்தை ஓட்டிய நபர் நீதிமன்றத்தில் உள்ள நபர் ஆவார். அவருக்கு பின்னால் உட்கார்ந்து வந்த செல்வநாதன் என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அதன்பின்பு என்னை எம்.எம். ஆர்த்தோ மருத்துவமனைக்கும், எனது அண்ணனை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கும் சிகிச்சைக்கு சென்றோம். நான் மருத்துவமனையில் மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். பின்பு, அறுவை சிகிச்சை செய்தனர். எங்கள் ஊரைச் சேர்ந்த சின்னராஜா

என்பவர் எங்களுக்கு பின்னால் வந்துக்கொண்டிருந்தார். அவர் வந்த இருசக்கர வாகனத்தில்தான் சின்னராஜா எனது அண்ணனை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் எனது அண்ணன் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து எனது அண்ணன் உடையதுதான். பட்டியல் சாட்சி 1 எனது அண்ணன் ராஜேஷ் குமார் கடந்த 01.10.2020ம் தேதி மருந்து குடித்து இறந்துவிட்டார். **(எனது அண்ணன் கையெழுத்துடன் கூடிய புகார் வாக்குமூலம் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தது இரவு 07.00 மணி. அப்போது இருட்டாக இருந்தது. எனக்கு உடம்பு சரியில்லாமல் இருந்ததால், நான் தலையில் போர்த்தியிருந்தேன். அதனால் நான் எதிரியை பார்க்கவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் ஒரு மாட்டுவண்டி அங்கு வந்தது. அந்த மாட்டு வண்டியில் இருசக்கர வாகனம் மோதிதான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னார்கள். என்னை கும்பகோணம் மருத்துவமனைக்கு எனது அப்பாவும், எனது அண்ணன் ரமேஷ் என்பவரும் அழைத்துச் சென்றார்கள். எனது அண்ணன் கொடுத்த புகார் வாக்குமூலம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நாங்கள் இருவரும் வேறுவேறு மருத்துவமனையில் இருந்தோம். எதிரி தமிழ்செல்வனை இதற்கு முன்னர் நான் வேறு எங்கும் பார்த்தது இல்லை. எதிரிதான் தமிழ்செல்வன் என்று போலீசார் சொன்னபின்புதான் தெரிந்துக்கொண்டேன். வண்டிமாடு தாறுமாறாக ரோட்டில் சென்றதால், இருசக்கர வாகனங்கள் மோதிக்கொண்டு விபத்து ஏற்பட்டது என்று சொன்னால்சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு எதிரி காரணமில்லை என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-இரா.இராஜசேகரன்,எல்.எல்.எம்.,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.